வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—சரவணகுமார்

தேதி-8.10.2024 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று புதுடெல்லியில் 70-ஆவது தேசிய திரைப்பட விருதுகளை வழங்கி சிறப்பித்தார்

இன்று இந்திய விமானப் படையின் 92-ஆவது நிறுவன நாள், சென்னையில் முதல் முறையாக, தாம்பரம் விமானப்படை நிலையத்தில் கொண்டாடப்பட்டது.

புதுச்சேரி தொண்டமாநத்தம் கிராமத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள நீர் தேக்க தொட்டியுடன் கூடிய, குடிநீர் விநியோக திட்டத்தை இன்று துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் தொடக்கி வைத்தார்.

இந்திய தர நிர்ணய அமைவனம் தொழில் துறையினருக்கு உகந்த அணுகுமுறையுடன் செயல்பட வேண்டுமென புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி கேட்டுக் கொண்டுள்ளார்.

திரைப்பட விருது

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று புதுடெல்லியில் 2022-ஆம் ஆண்டிற்கான தேசிய திரைப்பட விருதுகளை வழங்கி சிறப்பித்தார்.. இந்த 70-ஆவது தேசிய திரைப்பட விருது வழங்கும்

விழாவில் மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ், இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன், துறைச் செயலர் திரு சஞ்சய் ஜாஜு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். விழாவின் போது பொன்னியின் செல்வன் பகுதி-1 திரைப்படத்தின் இயக்குனர் மணிரத்னம் சிறந்த தமிழ் திரைப்படத்திற்கான விருது பெற்றார். புகழ் பெற்ற நடிகர் மிதுன் சக்கரவர்த்திக்கு, நாட்டின் மிக உயரிய திரையுலக விருதான தாதா சாஹேப் பால்கே விருது வழங்கப்படுகிறது.

*மோடி-நவராத்திரி*

நவராத்திரி பண்டிகையின் 6-ஆம் நாளான இன்று பிரதமர் திரு நரேந்திர மோடி, காத்யாயினி தேவிக்கு பிரார்த்தனை செலுத்தி உள்ளார். காத்யாயினி தேவியின் அருள், பக்தர்கள் அனைவரின் வாழ்வையும், பலம், சக்தி மற்றும் துணிச்சலால் நிறைக்கட்டும் என்று, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் பிரதமர் கூறி உள்ளார்.

*வாக்கு எண்ணிக்கை*

ஜம்மு-காஷ்மீர் மற்றும் அரியானாவில் சட்டமன்ற தேர்தல் வாக்கு எண்ணிக்கை இன்று நடைபெற்று வருகிறது. வாக்கு எண்ணிக்கை நிலவரங்கள் குறித்து கடைசியாக கிடைத்த தகவல்களின் படி ஜம்மு-காஷ்மீரில் மொத்தம் உள்ள 90 சட்டமன்ற தொகுதிகளில், தேசிய மாநாடு-காங்கிரஸ் கூட்டணி, 47 தொகுதிகளில் வெற்றி பெற்று, மேலும் 1 தொகுதியில் முன்னிலையில் உள்ளது. அரியானாவில் மொத்தம் உள்ள 90 சட்டமன்ற தொகுதிகளில் பிஜேபி, 40 தொகுதிகளில் வெற்றி பெற்று, மேலும் 8 தொகுதிகளில் முன்னிலை வகிக்கிறது.

*மோடி-விமானப் படை*

இன்று விமானப் படை தினத்தை ஒட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி விமானப் படையினர் அனைவருக்கும் வாழ்த்து தெரிவித்துள்ளார். துணிச்சலுக்கும், தொழில்முறைத் திறன்களுக்கும் பெயர் பெற்றது இந்திய விமானப் படை என்றும், நாட்டை பாதுகாப்பதில் விமானப் படையினரின் பங்கு மிகவும் போற்றத் தக்கது என்றும், சமூக ஊடகப் பதிவு ஒன்றில் அவர் கூறி உள்ளார். இந்திய விமானப் படையின் வெற்றிகளையும், 21-ஆம் நூற்றாண்டின் மிகப் பெரிய சக்திகளில் ஒன்றாக இந்திய விமானப்படை மேம்பட்டது எப்படி என்பதையும் விளக்கும் வகையிலான காணொளி ஒன்றையும் பிரதமர் பகிர்ந்து கொண்டுள்ளார்.

*கார் பேரணி*

இன்று விமானப் படை தினத்தை ஒட்டி, விமானப் படையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, வாயு வீர் விஜேதா கார் பேரணியை. லடாக்கில் உள்ள தோய்ஸ் விமானப் படை தளத்தில் இருந்து, மத்திய நெடுஞ்சாலைத் துறை இணை அமைச்சர் திரு ஹரீஷ் மல்கோத்ரா. கொடி அசைத்து தொடக்கி வைத்தார். இந்திய விமானப் படையைச் சேர்ந்த போர் வீரர்கள் மற்றும் உத்தராகண்ட் போர் நினைவுச் சின்னத்துடன் தொடர்புடைய முன்னாள் வீரர்கள், விமானப் படையின் சாகசப் பிரிவைச் சேர்ந்த விங் கமாண்டர் விஜயபிரகாஷ் பட் தலைமையில், இப்பேரணியில் பங்கேற்றுள்ளனர். இவர்களின் இந்த கார் பேரணி,

கார்கில், ஸ்ரீநகர், மற்றும் டேராடூன் வழியாக பயணித்து, இம்மாதம் 29-ஆம் தேதி, அருணாரச்சல பிரதேசத்தில் உள்ள தவாங் பகுதிக்கு சென்றடையும், வழிநெடுகிலும் இந்திய விமானப் படையின் மகத்தான வரலாறு குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிகளிலும், பாதுகாப்பு படைகளில் சேர்ந்து தாய்நாட்டிற்கு சேவை புரிவதில் இளைஞர்களை ஊக்குவிக்கும் பணிகளிலும், கார் பேரணிக் குழுவினர் ஈடுபட உள்ளனர்.

*விமானப் படை தினம்*

இன்று இந்திய விமானப் படையின் 92-ஆவது நிறுவன நாள், சென்னையில் முதல் முறையாக, தாம்பரம் விமானப்படை நிலையத்தில் கொண்டாடப்பட்டது. முப்படைகளின் தலைமை தளபதி ஜென்ரல் அனில் சவ்கான், விழாவின் போது கொடியேற்றி வைத்தார். விமானப் படைத் தலைவர் ஏர் சீப் மார்ஷல் ஏ பி சிங், அணிவகுப்பை பார்வையிட்டு, இவ்வாண்டின் சிறந்த விமானப் படைப் பிரிவுகளுக்கு விருதுகளை வழங்கினார். உலகின் நடப்பு பாதுகாப்பு நிலவரங்களையும், தற்போது நிலவும் பிணக்குகளையும் வைத்துப் பார்க்கையில், வலுவான திறன் மிகுந்த விமானப் படையின் அவசியத்தை புரிந்து கொள்ள முடியும் என்று விமானப் படைத் தலைவர் கூறினார். நாட்டின் தேசிய நலனுக்கு எதிரான எந்த ஒரு சவாலையும் சந்திக்க விமானப் படையினர் முற்றிலும் தயார்

நிலையில் இருக்க வேண்டிய அவசியத்தை அவர் வலியுறுத்தினார். பல்வேறு துறைகளுக்கு இடையிலான பிணைப்புகள் அதிகரித்து வரும் இன்றைய சூழலில், வழக்கத்திற்கு அப்பாற்பட்ட சிந்தனைகள் மற்றும் புதுமையாக்க முயற்சிகளுடன், நவீன தொழில் நுட்பங்களை நன்கு பயன்படுத்திக் கொள்ளுதல் அவசியம் என்றும் அவர் கூறினார்.

திறன் மிகுந்த, வலுவான, சுயசார்புடன் கூடிய விமானப் படை என்ற கருப்பொருள் அடிப்படையில், இவ்வாண்டு விமானப் படை தினம் கொண்டாடப்படுவதை அவர் சுட்டிக்காட்டி, எதிர்காலத்திற்கான விமானப்படையின் எண்ணங்களையே, இக்கருப்பொருள் விளக்குவதாக கூறினார்.

விமானப் படையின் கடந்த கால சாதனைகள் குறித்து திரு ஏபி சிங் பேசுகையில் இந்திய விமானப் படையினர் பல்வேறு சந்தர்ப்பங்களில் தங்களின் திறனை நிரூபித்து இருப்பதாக கூறினார். 61-ஆண்டு இடைவெளிக்குப் பின்னர் இந்திய விமானப் படையினர் இந்திய மண்ணில் நடத்திய தரங் சக்தி கூட்டுப் பயிற்சியில், 30-க்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்றதை அவர் சுட்டிக் காட்டினார்.

இயற்கை பேரிடர் போன்ற மானுடத் துயரங்களின் போது முதலில் உதவிக்கு வருவது இந்திய விமானப் படை தான் என்றும்,

வெளிநாடுகளுக்கு நிவாரண உதவி வழங்கும் பணிகளும் இதில் அடங்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். அக்னிவீர் மகளிர் குழுவினர் சிறப்பான முறையில் செயல்பட்டு வருவதையும் அவர் பாராட்டினார்.

இந்திய விமானப்படை தின விழாவில் சூரிய கிரண் உள்ளிட்ட விமானப்படை வான் சாகச குழுவினரின், அணிவகுப்பு மற்றும் சாகசங்களும் இடம் பெற்றன. முப்படைகளின் முன்னாள் தலைவர்கள், மூத்த அதிகாரிகள் மற்றும் முன்னாள் போர் வீரர்கள் பலரும் விழாவில் கலந்து கொண்டனர்.

□ரக் கட்டுப்பாடு

மத்திய உணவு மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் இந்திய தர நிர்ணய அமைவனம் சார்பில், புதுச்சேரியில் இன்று நடைபெற்ற உலக தர நிர்ணய தின விழாவில், முதலமைச்சர் திரு ரங்கசாமி, தலைமை விருந்தினராக கலந்து கொண்டார். புதுச்சேரியில் இவ்விழாவை நடத்தும் இந்திய தர நிர்ணய ஆணையத்தின் சென்னை பிரிவுக்கு அவர் பாராட்டு தெரிவித்துக் கொண்டார். பல்வேறு தர மேம்பாட்டு முயற்சிகள் காரணமாகவே இந்திய தயாரிப்புகள் தற்போது உலக அளவில் தரமான பொருட்களாக பார்க்கப்படுவதாக அவர் கூறினார்.

ஐஎஸ்ஐ முத்திரை என்றால் தரம் மற்றும் நம்பகத்தன்மை என்று தான் பொருள் என்பதால், நுகர்வோருக்கு தரமான பொருட்கள் கிடைக்கச் செய்வதில் அதிகாரிகள் எவ்வித சமரசத்திற்கும் ஆட்படக் கூடாது என முதலமைச்சர் வலியுறுத்தினார். தொழில் துறையினர் மேலும் மேலும் தரமான பொருட்களை தயாரிக்க ஏதுவாக, தர நிர்ணய அமைவனம் தொழில் துறையினருக்கு உகந்த அணுகுமுறையுடன் செயல்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். இந்திய தர நிர்ணய அமைவனத்தின் திட்டங்களில் முக்கிய பங்களித்த 9 பணியாளர்களுக்கு முதலமைச்சர் இவ்விழாவின் போது விருதுகளை வழங்கினார். இந்திய தர நிர்ணய ஆணையத்தின் சென்னை பிரிவு தலைவர் திருமதி பவானி உள்ளிட்டோர் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

தொண்டமாநத்தம்

புதுச்சேரி தொண்டமாநத்தம் கிராமத்தில் 5 லட்சம் லிட்டர் கொள்ளளவில் புதிதாக கட்டப்பட்டுள்ள, நீர் தேக்க தொட்டியுடன் கூடிய, மேம்படுத்தப்பட்ட குடிநீர் விநியோக திட்டத்தை இன்று துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் தொடக்கி வைத்தார். நீரேற்று மோட்டாரை இயக்கி, நீர்தேக்க தொட்டியை பொது மக்களின் பயன்பாட்டிற்கு அவர் அர்ப்பணித்து வைத்தார். நீரேற்று மைய வளாகத்தில் பசுமை சூழலை உருவாக்கும் வகையில் மரக் கன்று ஒன்றையும் அவர் நட்டு வைத்தார்.

முதலமைச்சர் திரு ரங்கசாமி, சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு சாய் சரவணன் குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், பொதுப் பணித் துறை தலைமை பொறியாளர் திரு தீனதயாளன் உள்ளிட்ட அதிகாரிகளும் ஊர் பொது மக்களும் கலந்து கொண்டனர். 2.25 கோடி ரூபாய் மதிப்பில் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ள இத்திட்டத்தினால் தொண்டமானத்தம் அதன் சுற்றுப்புற பகுதிகளைச் சேர்ந்த சுமார் 8 ஆயிரம் பேர் பயன் பெறுவார்கள் என்று அரசு செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*ரங்கசாமி*

புதுச்சேரியில் விவசாயிகளின் 13 கோடி ரூபாய் கடனில் 12 கோடி ரூபாய் விவசாயக் கடன்களை தீபாவளிக்குள் தள்ளுபடி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு ரங்கசாமி தெரிவித்துள்ளார். இன்று தொண்டமானத்தம் கிராமத்தில் புதிய நீர்தேக்க தொட்டியுடன் கூடிய, மேம்படுத்தப்பட்ட குடிநீர் விநியோக திட்டத்தின் தொடக்க விழாவில் பேசுகையில் அவர் இதைத் தெரிவித்தார். புதுச்சேரியில் நகரப் பகுதிகள் உட்பட எல்லாப் பகுதிகளிலும், மக்களுக்கு நல்ல குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும், 450

கோடி ரூபாய் செலவில் கடல் நீரை குடிநீராக்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

கடந்த ஆட்சியில் எந்தப் பணிகளும் முடிக்கப்படவில்லை என்றும், தமது அரசு பொறுப்பேற்ற பின்னர் தான், போதிய நிதி ஒதுக்கி, நல்ல தார் சாலை, சிமெண்ட் சாலைகள், மற்றும் பாலங்கள் அமைக்கப்பட்டு வருவதாகவும் முதலமைச்சர் தெரிவித்தார். மாநில அந்தஸ்து இருந்தால் தான் எந்த திட்டத்தையும் நாமாக செயல்படுத்த முடியும் என்ற நிலையிலும் நிர்வாகப் பிரச்சனைகளுக்கு இடையிலும் தமது அரசு மத்திய அரசின் உதவியுடன் அனைத்து திட்டங்களையும் செயல்படுத்தி வருவதாக அவர் கூறினார்.

இளைஞர்களுக்கு அதிக வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பது குறித்து அரசு ஆலோசனை மேற்கொண்டு வருவதாகவும் தீபாவளிக்கு முன்பாக புதுச்சேரியில் ரேஷன்கடைகள் திறக்கப்பட்டு இலவசப் பொருட்கள் வழங்கப்படும் என்றும் முதலமைச்சர் திரு ரங்கசாமி தெரிவித்தார்.

*கைலாஷ்நா□ன்-யாகம்*

புதுச்சேரி தர்ம ரக்ஷன சமிதி சார்பில், சாரதா நவராத்திரியை முன்னிட்டு, லாஸ்பேட் ஸ்ரீ சங்கர வித்யாலயா மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற, சத சண்டீ மகா ஹோமத்தில், துணை நிலை

ஆளுநர் திரு கைலாஷ்நாதன் கலந்து கொண்டார். யாகத்தின் போது நடைபெற்ற கோ பூஜையில் அவர் பங்கேற்றார்.

*ஏனாம்*

ஏனாம் வெங்கடேஸ்வரர் கோவிலில் வருடாந்திர பிரமோற்சவ விழாவின் ஒரு பகுதியாக இன்று நடைபெற்ற திருக்கல்யாண உற்சவத்தில் மண்டல நிர்வாக அதிகாரி திரு ஆர் முனுசாமி, திருக்கோவில் நிர்வாக அதிகாரி திரு கே ராமகிருஷ்ணன், மற்றும் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். ஏனாம் வெங்கடேஸ்வரர் கோவிலில் தற்போது திருப்பணிகள் நடைபெற்று வருவதால், பிரமோற்சவ விழா தொடர்பான பூஜைகள் மற்றும் சடங்குகள், பாலாலயத்தில் வைத்து நடத்தப்படுவதாக எமது ஏனாம் நிருபர் தெரிவிக்கிறார்.

*நோபல் பரிசு*

இயற்பியல் துறையில் 2024-ஆம் ஆண்டிற்கான நோபல் பரிசு அமெரிக்க விஞ்ஞானி John Hopfield, பிரிட்டிஷ்-கனேடிய விஞ்ஞானி Geoffrey Hinton ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. செயற்கை நரம்புக் கட்டமைப்பு மூலமான இயந்திரக் கற்றலை சாத்தியமாக்கும் வகையில் அடிப்படையான கண்டுபிடிப்புகளை வெளியிட்டதற்காக, இவர்கள் நோபல் பரிசுக்கு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளதாக, ராயல் ஸ்வீடிஷ் அறிவியல் அகாடமி இன்று அறிவித்துள்ளது.

*ராஜ்நாத்*

பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் இன்று ஜெர்மனி பாதுகாப்பு அமைச்சர் திரு போரிஸ் பிஸ்டோரியசுடன் தொலைபேசி மூலம் உரையாடினார். பாதுகாப்பு தொழில் துறையில் ஒத்துழைப்பையும் பொருள் விநியோக சங்கிலியில் நெகிழ்வுத் தன்மையையும் மேம்படுத்துவது தொடர்பாக தாங்கள் விவாதித்தாக சமூக ஊடகப் பதிவு ஒன்றில் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார். கூட்டு வான் பயிற்சி மற்றும் கடல் பயிற்சி உட்பட பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பாக தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் செயல்பாடுகள் குறித்தும் இந்த தொலைபேசி உரையாடலின் போது மறுஆய்வு செய்யப்பட்டது. இந்தியாவிற்கும்-ஜெர்மனிக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளின் முக்கிய தூணாக பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து விரைவிலேயே நேரில் சந்தித்துப் பேச, இருநாட்டு பாதுகாப்பு அமைச்சர்களும் திட்டமிட்டுள்ளனர்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று புதுடெல்லியில் 70-ஆவது தேசிய திரைப்பட விருதுகளை வழங்கி சிறப்பித்தார்

இன்று இந்திய விமானப் படையின் 92-ஆவது நிறுவன நாள், சென்னையில் முதல் முறையாக, தாம்பரம் விமானப்படை நிலையத்தில் கொண்டாடப்பட்டது.

புதுச்சேரி தொண்டமாநத்தம் கிராமத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள நீர் தேக்க தொட்டியுடன் கூடிய, குடிநீர் விநியோக திட்டத்தை இன்று துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் தொடக்கி வைத்தார்.

இந்திய தர நிர்ணய அமைவனம் தொழில் துறையினருக்கு உகந்த அணுகுமுறையுடன் செயல்பட வேண்டுமென புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி கேட்டுக் கொண்டுள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 8.10.2024/Script.

-----------------------